**அரையாண்டுத்தேர்வு - மாதிரி வினாத்தாள் --- 1 ( டிசம்பர் - 2019 )**

**மேல்நிலை முதலாம் ஆண்டு**

**வணிகவியல்**

நேரம் : 15 நிமிடங்கள் + 3.00 மணி    மதிப்பெண் : 90

## பகுதி ---- I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**    $20 \times 1 = 20$

1. கப்பல் தலைவரால் சரக்கு பெற்றுக் கொண்டதற்கு ஆதாரமாக வழங்கப்படும் ரசீது ----------
   அ) அனுப்புகை ரசீது    ஆ) கப்பல் ரசீது
   இ) கப்பல் துணைத்தலைவர் ரசீது    ஈ) வாணிக தூதுவர் இடாப்பு

2. உலக வர்த்தக அமைப்பின் தலைமையகம் அமைந்துள்ள இடம் ---------
   அ) நியூயார்க்    ஆ) இலண்டன்    இ) ஜெனீவா    ஈ) பிரேசில்

3. செலுத்தல் சமநிலை உள்ளடக்கியது ---------
   அ) நடப்பு கணக்கு    ஆ) முதல் கணக்கு
   இ) பெறுதல் செலுத்தல் கணக்கு    ஈ) நடப்பு கணக்கு மற்றும் முதல் கணக்கு

4. நிறுவனத்திற்கும் வெளிநபருக்கும் உள்ள உறவு முறையை பற்றி குறிப்பிடுவது எது?
   அ) தகவலறிக்கை    ஆ) சங்க நடைமுறை விதிகள்
   இ) அமைப்பு முறையேடு    ஈ) கூட்டுருவாக்கச் சான்றிதழ்

5. ஒரு நாட்டில் குடியிருப்போருக்கும் மற்றொரு நாட்டில் குடியிருப்போருக்கும் இடையே நடைபெறும் நடவடிக்கைகள் பதிவு செய்யப்பட்ட அறிக்கை ----------
   அ) செலுத்தல் சமநிலை    ஆ) வாணிபச் சமநிலை
   இ) பெறுதல் செலுத்தல் அறிக்கை    ஈ) கணக்கியல் அறிக்கை

6. மொத்த வியாபாரியையும் நுகர்வோரையும் இணைக்கும் இணைப்புச் சங்கிலியாகச் செயல்படும் வணிக இடைநிலையர் --------- ஆவார்.
   அ) உற்பத்தியாளர்    ஆ) தரகர்    இ) சில்லறை வியாபாரி    ஈ) வாடிக்கையாளர்

7. வெளிநாட்டிலிருந்து பொருட்கள் வாங்கப்படுவது --------------- எனப்படும்
   அ) உள்நாட்டு வியாபாரம்    ஆ) ஏற்றுமதி வியாபாரம்
   இ) அயல் நாட்டு வியாபாரம்    ஈ) மறு ஏற்றுமதி வியாபாரம்

8. தவறான பொருத்தம் எது?
   அ) அஞ்சல் வழி வாணிகம் ---- வாங்குபவர்களுக்கும், விற்பவர்களுக்கும் நேரடி தொடர்பு
   ஆ) சுற்றாடும் வியாபாரிகள் ---- நகரும் வியாபாரிகள்
   இ) நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலை ---- சில்லறை விற்பனை நிலையம்
   இ) சிறப்பங்காடி ---- பேரளவு சில்லறை பண்டகசாலை

9. வியாபார இடைநிலையர்களை ----------- வகைகளாகப் பிரிக்கலாம்.
   அ) மூன்று    ஆ) இரண்டு    இ) ஐந்து    ஈ) நான்கு



10. ஒரு குடும்பத்திலிருந்து எத்தனை பேர் சுய உதவி குழுக்களில் உறுப்பினராக இருக்க முடியும்?
   அ) ஒருவர்    ஆ) இரண்டு பேர்    இ) மூன்று பேர்    ஈ) நான்கு பேர்

11. உற்பத்தி துறையின்கீழ் ஒரு குறு நிறுவனத்தின் முதலீட்டு உச்சவரம்பு ---------- லட்சத்திற்கு மிகக்கூடாது.
   அ) 10    ஆ) 20    இ) 25    ஈ) 50

12. கூட்டுறவு சங்கங்கள் ------------ கோட்பாட்டின்படி இயங்கி வரும் நிறுமமாகும்.
   அ) ஒரு நபர் ஒருவாக்கு    ஆ) ஒரு பங்கு ஒருவாக்கு
   இ) அடிப்படை கோட்பாடு    ஈ) மேற்கண்ட ஏதுமில்லை

13. இந்தியன் இரயிவே எதற்கு உதாரணமாக கூறலாம்?
   அ) பொதுகழகம்    ஆ) அரசு நிறுமம்    இ) துறைவாரி அமைப்பு    ஈ) வாரிய அமைப்பு

14. இந்திய மைய வங்கி என்பது -------------
   அ) பி என் பி    ஆ) எஸ் பி ஐ    இ) ஐ சி ஐ சி    ஈ) ஆர் பி ஐ

15. பழங்கள் காய்கறிகள் போன்ற அழுகக் கூடிய பொருட்களின் சேமிப்பிற்காக ----------- பண்டக காப்பகங்கள் பயன்படுத்தப்படுகின்றன.
   அ) ஆவணம்    ஆ) தனியார்    இ) குளிர்பதன    ஈ) கூட்டுறவு

16. காப்பீட்டின் அடிப்படை கோட்பாடு_________ ஆகும்.
   அ) மிக்க நம்பிக்கை    ஆ) கூட்டுறவு    இ) பகர உரிமை    ஈ) அண்மை காரணம்

17. NEFT இந்திய ரிசர்வு வங்கியால் தொடங்கப்பட்ட ஆண்டு ------------
   அ) 2005    ஆ) 2013    இ) 2010    ஈ) 1995

18. சென்னையில் டிராம் வண்டிகள் போக்குவரத்து ------------ ஆம் ஆண்டுவரை செயல்பாட்டில் இருந்தது.
   அ) 1932    ஆ) 1933    இ) 1934    ஈ) 1935

19. சமூகப் பொறுப்புணர்வு வணிகத்தில் --------- விலையில் பண்டங்களை வழங்குகிறது.
   அ) அதிக விலை    ஆ) குறைந்த விலை
   இ) நியாயமான விலை    ஈ) மிதமான விலை

20. நடப்புச் சொத்துக்களை வாங்குவதற்குத் தேவையான நிதிக்கான ஒரு உதாரணம் ------------
   அ) நிலைமுதல்    ஆ) இருத்தி வைக்கப்பட்ட ஆதாயம்
   இ) நடைமுறை முதல்    ஈ) குத்தகை நிதி

## பகுதி --- II

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 30 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** 7 × 2 = 14

21. பண்டமாற்றுமுறை என்றால் என்ன?
22. வெளிநாட்டு வங்கிகள் என்றால் என்ன?
23. தானியங்கி பணம் வழங்கும் அட்டைப் பற்றி நீவீர் அறிவது யாது?
24. கப்பல் வாடகை ஒப்பாவணம் என்றால் என்ன?
25. சரக்காணை என்றால் என்ன?
26. மத்திய வங்கி பற்றி சுருக்கமாக விளக்குக.
27. உமது ஊரிலுள்ள சில்லறை நிறுவனங்களுக்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக
28. வைப்பு இரசீது என்றால் என்ன?
29. தனி உரிமம் பெற்றவர் என்பவர் யார்?
30. திரு. குமார் அவர்கள் தன்னுடைய தொழிற்சாலையை ₹. 8,00,000 - க்கு தீக் காப்பீடு செய்திருந்தார். தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தினால் அவருக்கு ₹. 10,00,000 - க்கு நட்டம் ஏற்பட்டது. காப்பீடு நிறுவனத்திடமிருந்து அவர் எவ்வளவு தொகை பெறுவார்? ஏன்?

## பகுதி --- III

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 40- க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** 7 × 3 = 21

31. பாண்டியர் ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட துறைமுகங்கள் யாவை?
32. சிறு குறிப்பு வரைக. (அ) தொழில் (ஆ) சிறப்புத் தொழில்
33. வரையறாப் பொறுப்பு என்றால் என்ன?
34. இந்துக் கூட்டுக் குடும்பத் தொழிலின் சிறப்பியல்புகள் ஏதேனும் மூன்றினை விவரி.
35. பட்டய (அ) சாசன நிறுமம் என்றால் என்ன?
36. கூட்டுறவு அமைப்பு என்றால் என்ன?
37. வட்டாரக் கிராமிய வங்கிகளின் நோக்கங்கள் யாவை?
38. கப்பல் இரசீது என்றால் என்ன?
39. தொழிலின் சமூகப் பொறுப்புணர்வின் தேவைகள் ஏதேனும் மூன்றினை விளக்குக.
40. ஒரு அமைப்பின் நலனை பாதுகாக்கும் பொருட்டு, சில நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒருவருக்கு வழங்கப்படும் உரிமையினை எவ்வாறு குறிப்பிடுப்படுகிறது? அத்தகைய உரிமை இந்து கூட்டு குடுப்பத்தில் யாருக்கு உண்டு? ஏன்?



## பகுதி --- IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 7 × 5 = 35

41. பொருளாதாரச் செயல்பாடுகளுக்கும் மற்றும் பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகளுக்கும் உள்ள வேறுபாடுகளை விவரி

( அல்லது)

தனியாள் வணிகத்தின் நன்மைகளை விவரி. ( ஏதேனும் 5 )

42. அமைப்பு முறையேட்டில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை?

( அல்லது)

பன்னாட்டு வணிகத்தின் குறைபாடுகள் ஏதேனும் ஐந்தை எழுதுக.

43. கூட்டாண்மை ஒப்பாவணத்தில் உள்ள உள்ளடக்கம் யாது?

( அல்லது)

செலுத்தல் சமநிலைக்கும் வாணிப சமநிலைக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக

44. கூட்டுறவு சங்கத்தின் நன்மைகள் ஏதேனும் ஐந்தை எழுதுக.

( அல்லது)

பல்வேறு வகையான வங்கிகளைச் செயல்பாடுகளின் அடிப்படையில் வகைப்படுத்துக. உதாரணம் தருக. ( ஏதேனும் 5 )

45. துறைவாரி நிறுமத்தின் சிறப்பியல்புகள் யாவை?

( அல்லது)

இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளில் ஏதேனும் ஐந்தினை எழுதுக

46. ( தொழிலில் ) இடர்கள் ஏற்படுவதற்கான பல்வேறு காரணங்களை விவரி

( அல்லது)

தனி உரிமையியலின் குணாதிசயங்களைக் கணக்கிடுக

47. அரசு நிறுமங்களின் ஏதேனும் ஐந்து சிறப்பியல்புகளைக் கூறுக

( அல்லது)

வணிகத்தின் பல்வேறு தடைகளில் ஏதேனும் ஐந்தினை எழுதுக